## தன்னம்பிக்கை

முட்களிலும் காயப்பட்டால் தான்
அழகான பூக்களைப் பறிக்க முடியும்
கொட்டு வாங்கினால் தான்
சுவையான தேனை ருசிக்க முடியும்
இரவு வந்தால் தான்
பிரகாசமான நிலவை ரசிக்க முடியும்
தோல்விகளைக் கடந்தால் தான்
வெற்றிக்கான மகுடத்தைச் சூட முடியும்.
ஆ. அஜந்தா 21டீ01
முச்சந்தியில் பொங்கல் விழா
மூன்றடி உயரத்தில்
மூன்றாம் வகுப்பு மாணவி
மூன்றாம் உலகப்போரை நினைவுப்படுத்தி
தண்ணீர் கேட்டாள்
தாகம் தீர்ந்ததும்
மகிழ்ச்சி என்னவோ அவளுக்குள்
தாகம் என்னவோ எனக்குள்
தாக்கியது அவள் பேச்சோ?
காயம் இன்னம் எனக்குள்
காயாத வடுவாக
அவள் சொன்ன மறுமொழிகள்….
பெத்த பிள்ளைக்கு தான் குடுப்பாங்க
நீங்க குடுத்ததுக்கு நன்றி அக்கா
அவளுக்கு முகத்திலோ மகிழ்ச்சி
அகத்திலோ ஒரு விரகத்தி
அவளை வாட்டியது
வறுமையல்ல
வறுத்தெடுக்கும்
வர்க்கத்தின் பேச்சு…
வியாதிக்கு அஞ்சி
சுயநலம் பேணும்
சுயநலவாதியின் பேச்சு…
உண்மையில்
அவள் மனதில்
அவள் நிலையில்
வறுமை இல்லை
ஏழ்மை இல்லை
இழிவு இல்லை
சுயநலம் இல்லை
இருந்தும் இல்லையென்றத
இழிவு நிலை

எதிர்பார்த்து கேட்கும்
ஏமாற்றம் கொடுத்து
ஏழ்மை நிலை
வேண்டியதை வேண்டியும்
வேண்டியதை வழங்காது
வறுமை நிலை...
பெற்ற பிள்ளைக்கு தண்ணீர்
மற்ற பிள்ளைக்கு கண்ணீர்
பெரியோரிடமில்லா பகிரும் பண்பு
சிறியோரின் செயலில் வருமோ?
ஒற்றமையில் ஒரு குழந்தை
ஏற்றத்தில் மறு குழந்தை
வேற்றமை வேரறுக்காது
ஒற்றமையாய் பொங்கல் போட்டியாம்
பிஞ்சு நெஞ்சில்
நஞ்சு விதைத்த
வேற்றமை களையெடுத்து
ஒற்றமை விதை விதைப்போம்
வருங்காலம் செழித்திட
எளியோரும் மகிழ்ந்திட...

பா. செல்லா புஷ்,
21BP05